# பணி நியமங்கள்
## பணியாளர்களைப் பாதுகாத்தல்

ஈஎஸ்ஏ என அறியப்படும் பணி நியமங்கள் சட்டம், 2000 (The Employment Standards Act, 2000), ஒன்ராறியோவில் பணியிடங்களில் பின்பற்ற வேண்டிய குறைந்த பட்ச நியமங்களை வகுக்கும் சட்டமாகும்.

நீங்கள் ஈஎஸ்ஏ உரிமைகளைக் கோரினீர்கள் அல்லது அது பற்றிக் கேட்டீர்கள் என்பதற்காக ஈஎஸ்ஏயினால் நீங்கள் பாதுகாக்கப்பட்டவர் ஆயின் வேலைதருனர் பின்வருவற்றைச் செய்ய முடியாது:

- உங்களை மிரட்டுவது
- வேலையிலிருந்து நீக்குவது
- வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்வது
- ஊதியத்தைக் குறைப்பது
- ஏதேனுமொரு வகையில் தண்டிப்பது, அல்லது
- இவை ஏதேனும் செய்வதாக மிரட்டுவது

**ஈஎஸ்ஏ யின் கீழ் பாதுகாப்பு எனக்குக் கிடையாது என எனது வேலைதருனர் கூறுகிறார். இது சரியா?**

நீங்கள் ஒன்ராறியோவில் பணியாற்றுகிறீர்கள் என்றால், பெரும்பாலும் ஈஎஸ்ஏயின் பாதுகாப்பு உங்களுக்கு உண்டு. சமஷ்டி அரசு ஊழியர்களுக்கும் மற்றும் வேறு விசேட பிரிவுகளைச் சேர்ந்த சில தனிநபர்களுக்கும் ஈஎஸ்ஏ பாதுகாப்புக் கிடைக்காது. இந்தச் சட்டத்தின்படி சில பணியாளர்களுக்கென விதிவிலக்குகளும் சிறப்பு விதிகளும் உள்ளன.

ஈஎஸ்ஏயினால் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறீர்கள் என்பதை அறிய தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்க.

**எனது உரிமைகள் யாவை?**

பின்வருவன உட்பட ஈஎஸ்ஏயின் கீழ் பல உரிமைகள் அடங்குகின்றன:

- வேலை நேரங்கள்
- குறைந்தபட்ச ஊதியம்
- மேலதிக நேரப் பணி (ஓவர்ரைம்) ஊதியம்
- ஊதியம் வழங்கப்படுதல்
- பொது விடுமுறைகள் மற்றும் பணிவிடுமுறைகள்
- தனிப்பட்ட அவசரநிலை விடுப்பு
- குடும்ப மருத்துவ விடுப்பு
- கர்ப்பகால அல்லது குழந்தை கவனிப்புக்கான விடுப்பு
- வேலை நீக்க அறிவிப்பு

ஈஎஸ்ஏ சட்டத்தின் கீழான உரிமைகள் பற்றி மேலும் அறிந்து கொள்ள, தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்ளவும்.

## என் உரிமைகளைக் கேட்டதற்காக நான் தண்டிக்கப்பட்டேன். நான் என்ன செய்ய முடியும்?

ஈஎஸ்ஏ உரிமைகளைக் கோரியதற்காக அல்லது அவை குறித்துக் கேட்டதற்காக வேலை தருனர் உங்களைத் தண்டித்து விட்டார் எனக் கருதினால், இயலுமானளவு விரைவாகத் தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் உரிமைகளைப் பற்றிப் புரிந்து கொள்ளவும், உங்கள் கேள்விகளுக்கு விடை அளிக்கவும், உங்கள் முறைப்பாட்டை விசாரணை செய்யவும் அமைச்சகத்தின் ஊழியர்கள் உதவ முடியும். உங்கள் உரிமைகள் பற்றித் தொழில் அமைச்சுடன் பேசியதற்காக வேலைதருனர் உங்களைத் தண்டிக்க முடியாது.

குறிப்பு: தொழில் சங்கம் அமைத்திருக்கும் பணியாளர்கள் தமது உரிமைகள் மீறப்பட்டதாகக் கருதினால், தொழில் அமைச்சுடன் பேசுவதற்கு முன்பாக தமது தொழிற்சங்கப் பிரதிநிதியிடம் பேச வேண்டும்.

## எனக்கு என்ன தேவைப்படும்?

தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பாக, உங்கள் வேலை மற்றும் வேலைதருனர் சம்பந்தமான எந்தத் தகவல்களையும் - உங்கள் பிரச்சினையை விளக்குவதற்கு உதவும் ஊதிய விபரத்துண்டு போன்றவற்றைச் சேகரித்து வைக்கவும்.

## தொழில் அமைச்சு எவ்வாறு உதவ முடியும்?

உரிமைகளைக் கோரியதற்காக வேலைதருனர் உங்களைத் தண்டித்து விட்டார் எனில் பணி நியமங்கள் அதிகாரி உங்கள் வேலைதருனர் உங்களுக்கு இழப்பீடு தரவேண்டும் அல்லது மீண்டும் வேலை தர வேண்டும் என்று உத்தரவிட முடியும். உங்களுக்கு ஊதியம் ஏதும் நிலுவையில் இருந்தால் அதையும் தர வேண்டும் என அந்த அதிகாரி மேலும் உத்தரவிடமுடியும்.

வேலைதருனர் மீது தொழில் அமைச்சு எச்சரிக்கை தண்டச்சீட்டு உட்பட குற்றச்சாட்டும் சுமத்த முடியும். குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் வேலைதருனர் மீது அபராதம் விதிக்கப்படலாம் அல்லது அவர் சிறைக்கு அனுப்பப்படலாம்.

**உதாரணம்:**

மரியா தனக்குக் குறைந்த பட்ச ஊதியத்தைவிடக் குறைவாகத் தரப்படுவதை அறிந்தாள். இது ஏன் என்று முகாமையாளரிடம் கேட்டாள். சில நாட்களுக்குப் பிறகு மரியா வேலையிலிருந்து நீக்கப்பட்டாள்.

ஈஎஸ்ஏ உரிமைகள் பற்றிக் கேட்டதற்காகத் தான் தன்னை வேலையிலிருந்து நீக்கி உள்ளனர் என மரியா நினைத்தாள். அவள் பணிநியமங்கள் தகவல் நிலையத்தை அழைத்து தனது பிரச்சினையை விளக்கினாள். தொழில் அமைச்சின் அலுவலர்கள் அவளது உரிமைகள் பற்றி அவள் விளங்கிக் கொள்ள உதவினார்கள். மரியா ஒரு முறைப்பாட்டினை மனுச் செய்தாள். அது விசாரிக்கப்பட்டது.

அவளுக்கு மீண்டும் வேலை தரப்பட வேண்டும், அவளுக்குச் சேர வேண்டிய ஊதியம் தரப்பட வேண்டும், மற்றும் அவளது ஊதியம் குறைந்தபட்ச ஊதியமாக அதிகரிக்கப்படவேண்டும் என அவளது வேலைதருனருக்கு ஆணையிடப்பட்டது.

## நான் உரிமை கோரல் மனுவைச் சமர்ப்பிக்கலாமா?

பணிநியமங்கள் தகவல் நிலையத்தைத் தொடர்பு கொள்ளவும். எம்முடன் பேசிய பிறகு, முறைப்பாட்டு மனுவை சமர்ப்பிக்கும் முடிவினை நீங்கள் எடுக்கலாம்.

ஒரு கோரல் மனு என்பது உங்களைப் பற்றிய, உங்கள் வேலையைப் பற்றிய, உங்களது வேலைதருனர் பற்றிய முக்கிய தகவல்கள் கொண்ட எழுத்துருவிலான உங்கள் முறைப்பாடு பற்றிய விளக்கமாகும்.

சேவை ஒன்ராறியோ ServiceOntario நிலையங்கள் மற்றும் தொழில் அமைச்சின் இணையத்தளத்தில் கோரல் மனு படிவங்கள் கிடைக்கும்.

மனுவைப் பதிவு செய்வதற்கு கட்டணம் ஏதுமில்லை.

## தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்க

**பணிநியமங்கள் தகவல் நிலையத்தை 416 326-7160 அல்லது (கட்டணமற்ற தொலைபேசி இலக்கம்) 1-800-531-5551, அல்லது செவிப்புலனற்றோருக்கான ரிரிவை 1-866-567-8893 இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.** உங்களுக்கு ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் பேசத் தெரியாது எனில் மொழி அறிந்த ஒருவரைக் கண்டறிந்து தொழில் அமைச்சினை அழைக்கும் போது அவரை உங்களோடு வைத்திருங்கள்.

ஈஎஸ்ஏயினால் பாதுகாக்கப்பட்ட உரிமைகள் பற்றிய மேலும் விபரமான தகவலை வழங்கும் மின்தள வெளியீடுகளைப் பெற தொழில் அமைச்சின் இணையத்தளமான www.labour.gov.on.ca இல் தொழில் நியமங்கள் பிரிவுக்கு வருகை தாருங்கள்.

*இந்தத் தகவல் பொதுமக்களுக்கான சேவை என்ற வகையில் வழங்கப்படுகிறது. தகவல்கள் சமகால மற்றும் திருத்தமானதான இருக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்த நாம் பெருமுயற்சி எடுத்த போதிலும் சில நேரங்களில் தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. ஆகையினால் நாம் தகவலின் திருத்தத்தை உறுதிப்படுத்த முடியாது. வாசகர்கள், அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கமுன்னர் இயலுமானவரை அத்தகவலைச் சரிபார்க்கவும்.*

esa
employment standards act

©Queen's Printer for Ontario, 2008
Printed in Canada
ISBN 1-4249-1279-2 (Print)
ISBN 1-4249-1280-6 (HTML)
ISBN 1-4249-1281-4 (PDF)

Tamil
"Claim Your Rights" is also available in English, French and other languages.
« Vos droits, voyez-y » est également disponible en anglais, en français et en d'autres langues